# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 5402/F/2024**

திரு.P. குமார் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

The Public Information Officer,
Oral Test Department (OTD),
Tamilnadu Public Service Commission,
TNPSC Road, Broadway,
Chennai-03. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P. குமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.S.பரமசிவம், சார்பு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 அவர்கள் ஆஜரானார் இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 07/11/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் 1998-99ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பக்கம் 3 இல் SECTION-II, DIRECT RECRUITMENT - SOME OF THE MAJOR RECRUITMENTS HANDLED IN THE YEAR ARE என்ற தலைப்பில் Veterinary Assistant Surgeon பணியிடத்தின் காலிப்பணியிடம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 174 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேற்படி பணியிடங்களுக்கான போட்டி தேர்வின் இறுதி

முடிவுகள் 22.10.1998 அன்று வெளியிடப்பட்டதாக அறியப்படுவதால், அதன் தேர்வாணைய செய்தி வெணியீட்டு எண் பற்றிய விவரத்தை தகவலாக வழங்குவது என்பன போன்ற 2 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. எனவே மனுதாரர் தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 30.12.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 23.04.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து கடித எண். 36.10/1/OTD-A/2026 நாள் 03.03.2026 தேதியிட்ட கடிதம் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆணையத்தின் பார்வைக்கும் மற்றும் மனுதாரரிடமும் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தகவல் கிடைத்துவிட்டதாக கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் 07/11/2023 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் கோரியுள்ள இனங்களுக்கு தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 03.03.2026 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியிருப்பதை இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும் ஆணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.**

- **மனுதாரரின் 07/11/2023 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திருமதி.R.அனிதா, சார்பு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ.25000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 12.05.2026 அன்று திருமதி.R.அனிதா, அப்போதைய**

**பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 5402/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

The Public Information Officer,
Oral Test Department (OTD),
Tamilnadu Public Service Commission,
TNPSC Road, Broadway,
Chennai-03.

**திருமதி.R.அனிதா**
**(அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்)**
Oral Test Department (OTD),
Tamilnadu Public Service Commission,
TNPSC Road, Broadway,
Chennai-03.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.P.குமார்,
39/A. சீனிவாசா அப்பார்ட்மெண்ட்,
பழைய கோர்ட் கட்டிடம்,
ராஜாஜி காலனி, ஆத்தூர் நகரம்,
சேலம்-636102.

Copy to file: KR/PA